Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்; 06 விலை ரூபா; 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 13 (29 - 07 - 1991) திங்கட்கிழமை ஓசை: 161

## இரத்தம் தேவை!

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியின் இருப்பிலுள்ள இரத்த வகைகள் தற்போது முடிவடைந்து வருவதாகத் தெரிகிறது. இதனால் இரத்த வங்கிக்கு இரத்தம் அவசியமாகத் தேவைப்படுகிறது என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறியுள்ளன. எனவே இரத்ததானம் செய்ய விரும்புவோர் யாழ். வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பாலம் பணிமனையில் தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இன்றைய போர்க்காலச் 6ஆம் பக்கம் பார்க்க)

### ★ புல்லாவெளியில் பயங்கரச் சண்டை

# இராணுவத்தின் கவசவாகன அணி விடுதலைப் புலிகளால் நாசம்

### ‘பலவேகய’வின் இறுதிக்கட்டமென சிறிலங்கா அறிவிப்பு

(இயக்கச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சென்றடைவதற்கான இறுதக் கட்டத் தாக்குதலை சிறிலங்கா இராணுவம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து புலலாவெளிப்பகுதியில் நேற்றுக்காலை கடும் மோதல் மூண்டது. இம்மோதலில் ஐந்து கவச வாகனங்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். புலிகள் தரப்பில 17 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

ஆனையிறவு இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகளின் முற்றுகையை முறியடிப்பதற்காக மேற்கொண்ட ‘ஒப்பரேசன் பலவேகய’ இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கட்ட நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று அறிவித்தன. மேலும் ஆனையிறவு நோக்கி முன்னேற முயலும் இராணுவத்தினருக்கு உதவியாக சிறிலங்கா விமானப்படை விமானங்கள் உதவிவருவதாகவும் அவை தெரிவித்தன.

அதே வேளை யுத்த முனையில் இருந்து வரும் செய்திகள் புல்லாவெளிப் பகுதியில் இருந்துநேற்றுக்காலைஒன்பது (6ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

ஆனையிறவுப்பகுதியில் நிகழும்பாலைவனப்போர் முனைபற்றிய வரைபடம் நாளைவெளிவரும். பிரதிகளை முந்திப் பெற்றுக கொள்ளவும்.

## லெப். கேணல் சரா பற்றிய சில குறிப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் ஆனையிறவுமுகாம்தகர்ப்பு முயற்சியின் போதுவீரமரணமடைந்தலெப் கேணல் சரா (சு. ஜீவராசா) கல்வியங்காட்டைச் சேர்ந்தவராவர். இவர் யாழ், இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். 1983 ஆம்ஆண்டுமேற்கு ஜேர்மனியில் இருந்து இந்தியாவிற்கு வந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டவர். விடுதலைப் புலிகளின் மூன்றாவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற இவர் யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல், மன்னார் பொலிஸ் நிலையத்தாக்குதல் உட்பட தமிழீழம் எங்கும் நிகழ்ந்த பெரும்பாலான தாக்குதல் நடவடிக்கைகளில் பங்குபற்றியவர். அத்துடன் 1985—1987 ஆம் ஆண்டுப் (6ஆம் பக்கம் பார்க்க)

## குறிஞ்சாத்தீவு காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிப்பு

(ஆனையிறவு)

குறிஞ்சாத்தீவு உப்பள விடுதி இராணுவமுகாம் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு மேற் கொண்ட தீவிர தாக்குதலில் பல காவலரண்கள் அழிக்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இத் திடீர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதல் அதிகாலை வரை நீடித்தது.

இத் தாக்குதலின் போது இராணுவ முகாம் காவல் [6ஆம் பக்கம் பார்க்க]

## அம்பாறையில் கண்ணிவெடி
## உயர் அதிகாரி பலி; 9 படையினர் படுகாயம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிக்குடியாற்றுப்பகுதியில் ரோந்துசென்ற விசேட அதிரடிப்படைமீது நேற்றுவிடுதலைப்புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர். இதில் ஒரு அதிகாரி கொல்லப்பட்டதுடன் ஒன்பது விசேட அதிரடிப்படையினர் படுகாயமடைந்துள்ளனர் என்று உத்தியோக பூர்வ வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## தமிழீழப் போராட்ட முடிவின் ஆரம்பப் போர் - டென்சில் கொப்பேகடுவ

(கொழும்பு)

ஆனையிறவு முகாமைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் நடத்தும் போர் தமிழ் ஈழப் போராட்டத்தின் முடிவின் ஆரம்பக் கட்டமாக இருக்கக்கூடும் என்று சிறிலங்கா இராணுவ அதிகாரிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் வெற்றிலைக் கேணியிலிருந்து ஆனையிறவை நோக்கி வரும் படையணி புலிகளின் கடும் எதிர்ப்பை சந்திக்க வேண்டி ஏற்பட்டதாகவும், ஆனையிறவு முகாம் புலிகளிடம் வீழ்ந்து விடாமல் தடுக்க இராணுவம் இதுவரையில்லாத பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த தயாராகி வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் புலிகள் நடத்தும் பெரும்போரை எதிர் கொள்ள தயாராகி வருவதாகவும், இராணுவத்தினர் வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுக்கு வந்தடைவதைத் தடுக்க புலிகள்தம் மாலான முயற்சி அனைத் 6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. புலிகள் மீட்ட ஆயுதங்களின் விபரம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொ ட குறுகிய நேரத் தாக்குதலில் எட்டு இராணுவத்தினர்கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர் படுகாயமடைந்த இராணுவத்தினரைத் தூக்கிக் கொண்டு ஏனையோர் தப்பி ஓடியதும்தெரிந்ததே.

இராணுவத்தினரிடமிருந்து புலிகளால் ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் (6ஆம் பக்கம் பார்க்க)

## இறுதித் தாக்குதலுக்குப் படையினர் அதிகரிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் பகுதியின் அமைப்பை நன்கு அறிந்தவர்கள் என்பதாலும் ஆள்பலம் அவர்கள் பக்கம் அதிகம் என்பதாலும் சிறிலங்கா இராணுவப் படைகளின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை
## கூட்டுப் பொருளாதார உடன்படிக்கை கைச்சாத்து

(புதுடில்லி)

சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத், மற்றும் வெளியுறவு செயலாளர் பேர்னாட் திலகரட்ணா ஆகியோர் ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்றுள்ளனர். இவர்கள் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உட்பட இந்தியாவின் அரசியல் வாதி 6 ஆம் பக்கம் பார்க்க)

# துணைப்படையில்சேர மக்கள் முண்டியடிப்பு

யுத்தமுனையில் பணிபுரிவதற்காக பெருந்தொகையான ஆண்களும் பெண்களும் விடுதலைப்புலிகளின் துணைப்படையில் சேருவதற்கு முன்வந்துள்ளார்கள்.

நேற்றைய தினம் கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் மாதிரிச் செயலகத்தில் இவர்கள் தங்கள் பெயர்களை முண்டியடித்துக் கொண்டு பதிவு செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அரச அதிகாரிகள், வர்த்தகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் தனியார் ஸ்தாபன ஊழியர்கள் என பல்வேறு தொழில் புரிவோரும்துணைப்படையில் பணிபுரிய தம்மை இணைத்துள்ளார்கள்.

இவர்கள் முப்பது வயதுக்கும் எழுபத்தைந்துவயதுக்கும் இடைப்பட்ட குடும்பஸ்தர்களாவர். ஐம்பதிற்கும் மேற்பட்ட தாய்மார்களும் களத்தில் பணிபுரிய முன்வந்துள்ளார்கள். இவர்களுக்கான துணைப்படைப் பிரிவொன்று நேற்றிரவு களத்திற்குச் சென்றுள்ளதாகவும் இவர்கள் களத்திலேயே ஆயுதப் பயிற்சியையும் மேற்கொள்வார்கள் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெருந்தொகையான இளைஞர்களும் யுவதிகளும் இயக்க உறுப்பினர்களாகத் தம்மை இணைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

# மண்ணின் மீட்பிற்காக மரணித்த

## லெப்.கேணல் சரா!

நாளை மலரும் தமிழீழத்திற்கு கட்டியங் கூறிச் சென்ற மாவீரர்
வரிசையில நீயும் ஒருவனானாய்
தானைத்தலைவன் தலைமைத் தமிழ்மகனின் சேனைப் படையின்
தளபதியாகிச் செருக்களம் சென்றவனே
உரிமை மீட்க உயிரைக்கொடுத்து உணர்வைக் காத்து
உலகை மறந்தவனே
செங்குருதிச் சேற்றிலே சிங்களவர் சிரசுகளைக் கொய்து விளையாடி
வீரகாவியம் படைத்தவனே
செந்தமிழன் வீரமதை செருக்களத்தில் நிலைநிறுத்தி செந்தணலில
நீறாகிப் போனவனே

(B 2872

**நீ சாகவில்லை**
தமிழீழ வரலாற்றின் ஏட்டிலே சரித்திரநாயகனாக
உலகுள்ள நாள்வரை வாழப்போகிறாய்!

திருநெல்வேலி வர்த்தகர்கள், மக்கள்.

**உனது மரணம்**
உணர்வுள்ள இதயங்களைத் தட்டியெழுப்பும்!
இன்பசுருதியாக இசைமீட்டிக்கொண்டேயிருக்கும்

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்.

### மலிவு விற்பனை

A L,O/L,ஆண்டு5 பரீட்சை களுக்கான, TUTES மலிவு விலையில் விற்பனையாகின்றன. BOND கல்வி நிறுவனம் 58/A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (B/2868)

### தவறிவிட்டது

பெரியதம்பி நாகராசா என்பவரின் அடையாள அட்டையுடன் ஒரு பேர்ஸ்ஸும் 27-7 91 அன்று மண்டைதீவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (B-2873)

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

அராலி களவத்துறை விளையாட்டுக்கழக மைதான நிதிக்காக அதிஷ்ர்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டு இலக்கங்கள் வருமாறு;

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | 1488 |
| 2 ஆம் பரிசு | 1998 |
| 3 ஆம் பரிசு | 2367 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| (1) 1057 | (2) 1955 | (3) 954 |
| (4) 1232 | (5) 751 | |

குறித்த இலக்கங்களுக்குரியவர்கள் 05-08-1991 இற்கு முன்னர் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

(R/ 1585) - செயலாளர்

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா இரத்தினம்மா

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைச் சேர்ந்த திருமதி க. இரத்தினம்மா 28 07-1991 அன்று காலமானார். இவர் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் கந்தையாவின் (P. W. D. மலேஷியா) அன்பு மனைவியும், கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. வைத்தியர் நாகலிங்கம் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் மூத்த புத்திரியும், திருமதி சோமலிங்கம் சரோஜினிதேவி (யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), திரு. துரைசிங்கம் (U. K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. பாலசுப்பிரமணியம் (மலேஷியா), திரு. தருமலிங்கம் ஆகியோரின் சிறிய தாயாரும், திரு. பொன்னம்பலம் சோமலிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்) அன்பு மாமியாரும், அகிலன், ஆதித்தன் (U. K.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி கனகலிங்கம் விசாலாட்சியின் (U. . .) அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29 07-1991) திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

திருமதி சோமலிங்கம்
சரோஜினிதேவி
(மகள்)

(R-1587)

## நினைவு கூருகின்றோம்...



**1991 - 07 - 29**

**லெப். சிறி**

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பண்டாரி குளத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரமரணமெய்திய
லேடிபாலா,பாலன் (பொன்னையா லலித்குமார் - பண்டாரிகுளம், வவுனியா)

1987 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
- வைரவன் காளிராசா (மாவடிச்சேனை, வெருகல்)
- சமந்த (பத்தக்குட்டி நாகேந்திரன் - பூநகர்)

கொழும்பில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட நெல்லியடி மற்றும் சாவகச்சேரியைச் சேர்ந்த 4 தமிழ் வர்த்தகர்கள்

1988 ஆம் ஆண்டு ஆட்காட்டி வெளிப்பகுதியில் வீரமரணமெய்திய
கப்டன் பட்டின (சூ. அன்ரன்ஜோக்ஸ் – பள்ளிமுனை, மன்னார்)

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் 3 ஆம் கட்டையிலிருந்து இந்தியப் படையினரின் முகாம் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த
கப்டன் ஜேசுதாஸ் (வீரகத்தி விக்கினேஸ்வரன் – கற்குளம், நெடுங்கேணி)
லெப். அன்சார் (சீவரத்தினம் சிவரூபன் – பரந்தன்)

மூதூர் மல்லிகைத்தீவில் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 14 தமிழர்கள்

மட்டக்களப்பு - படுவான்கரையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் வீரமரணமடைந்த
லெப். சிறி (கிருஷ்ணமூர்த்தி ஹரிபத்மநாதன் - யாழ்ப்பாணம்)
அகஸ்ரின் (யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தியின் தாக்குதலினால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்கள் ஆவர்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2871)

# "இந்தியா விட்ட மாபெரும் தவறு இலங்கைக்கு படைகளை அனுப்பியமையே"

"ஏமாற்றி அழைத்துச் சென்று இந்தியா துரோகத்தனம் செய்து விட்டது. ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட கூட்டணியும் குழுக்களும் தமிழ்த் துரோகிகளே."

தலைவர் வே. பிரபாகரன்



இந்தியா தமிழ் மக்களின் இரட்சகராய் செயல்படும் என மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளை அதுவோ இராட்சதராய் ஈழ மண்ணில் காலடி எடுத்து வைத்தது. திரௌபதி கண்ண பிரானை எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோதுராஜீவோ துச்சாதனர்களை அனுப்பி வைத்தார். துரியோதனனுக்கு கிடைத்த சகுனிபோல ராஜீவிற்கு டிக்சித் கிடைத்தார். இந்த இதிகாச ஒப்புவமை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினையும் தமிழ் மக்களுக்கு அதனால் ஏற்பட்ட துயர்களையும் விளக்கபோதுமானது உண்மையில் பாரதமாதாவின். கண்களை குத்தியது போலவே ராஜீவின் செயல்கள் அமைந்திருந்தன

இலங்கை அரசு தமிழரை ஒடுக்குவதால் தேசிய தனித்துவத்தை அழித்தொழிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தது. அதற்காக அது மொசாட்டிடம் உதவியை நாடியது. கினி மினியை அழைத்தது. எஸ் ஏ.எஸ்ஸை அழைத்தது. ராணுவ தளபாடங்களையெல்லாம் அந்நிய தேசத்திடம் இருந்து வரவழைத்தது. இவையெல்லாம் காசு கொடுத்தே செய்யப்பட்டன. இந்த வகையில் இந்திய இராணுவத்தை இலங்கை அரசு அழைத்தது. இந்திய ஆயுதங்களை தருவித்தது. ஆனால் ஒரு வித்தியாசம் காசு கொடுக்கப்படவில்லை என்பதே. கினிமினியாலும் எஸ் ஏ.எஸ்ஸாலும் தமிழரை ஒடுக்க முடியாத நிலையில் இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு பெரிய கினிமினியாக 'ஐ.பி கே.எப்' (I.P K.F) இலங்கைக்கு கை கொடுத்தது.

இந்த அரசியல் இராணுவ நடைமுறை ஒப்புவமையானது இதிகாசத்தில் காட்டப்பட்ட ஒப்புவமையைப் போன்று ஒப்பந்தத்தின் கொடுமையை விளக்கக்கூடியவகையில்மேலும் ஒரு உதாரணமாக உள்ளதெனலாம்

முதலாம் விமலதர்ம சூரியன் படைக்கலங்களுடன் கூடிய டச்சு அதிகாரிக்கு அனுப்பிய செய்தியில் "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்று முழங்கிய கூற்றை அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஜே.ஆர் 1977 ஆம் ஆண்டு தன் திமிர்படக் கூறினார். ஆனால் தமிழ் மக்கள் போருக்கு தயாரானதும், புலிகள் போர்க்களம் புகுந்ததும் அந்நியர்களிடம் கையேந்திய ஜே ஆர். இயலாமையின் இறுதிக் கட்டத்தில் ஐ.பி.கே.எவ் விடம் சரண் அடைந்தார். ஐ.பி.கே.எவ்வை கருவியாகக் கொண்டு தமிழர்களை அழிக்க ராஜீவுடன் ஒப்பந்தம் ஒன்றைச்செய்தார். அதுவே இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகும்.



ஆயுதக் கையளிப்பு

இந் நஒப்பந்தம் கருவிலேயே சிதைவுற்ற ஒன்று. தமிழ் மக்களின் நலனுக்காக போர்க்களத்தின் முன்னணிப் பாத்திரம் வகித்த தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்தாபனத்தையும், அதன் தலைவரையும் ஒப்பந்தம் சம்பந்தமாக இந்தியா எப்படி அணுகியுள்ளது என்பதை தலைவர்பிரபாகரனின் வார்த்தையில் அப்படியே நோக்குவோம்.

**1987 ஆம் ஆண்டு இதே தினத்தன்றுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. அதனை யொட்டி இக்கட்டுரை வெளி யாகின்றது.**

"எம்மை இந்தியாவிற்கு அழைத்துச் சென்ற போது சொன்னதுஎன்னவெனில் இந்தியப்பிரதமர் எம்முடன் சில விடயங்கள் பற்றி பேச விரும்புகின்றார் என்பது தான். தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஒப்பந்தம் செய்யப்போகும் பிரேரணை பற்றி எதுவுமே சொல்லவில்லை. டில்லிக்கு வந்த பின்னர் ஒப்பந்தப் பிரேரணையின் பிரதி ஒன்றை எமக்குத் தந்து விட்டு உடனடியாக அதை வாங்கிச்சென்று விட்டனர். சரியாக படித்துப் பார்ப்பதற்குக் கூட நேரம் தரப்படவில்லை அது இரகசியமானது என்றுகூறி வாங்கிச் சென்று விட்டனர்."

இவ்வாறு டில்லியில்இருந்து பிரபாகரன் 28-7-87 அன்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். மேலும் அந்த அறிக்கையில் அவர் கூறிய இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிடலாம்.

"ஏமாற்றி அழைத்துச் சென்று இந்தியா துரோகத்தனம் செய்து விட்டது. ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட கூட்டணியும், குழுக்களும் தமிழ்த் துரோகிகளே."

இந்த ஒப்பந்தத்தின் பொருட்டு விருந்தினர் போல் இந்தியாவால் அழைத்துச் செல்லப்பட்ட பிரபாகரன் அங்குகைதி போலவே நடத்தப்பட்டார். இதுபற்றியும், ஒப்பந்தம் பற்றியும் மேஜர் ஹர்கீர்சிங் ஊடாக பிரதித் தலைவர் கோ.மகேந்திரராசா, ராஜீவ் காந்திக்கு 30-7-87 அன்று அனுப்பி வைத்த கடிதத்தின் ஒரு பகுதியை இங்கு நோக்குவோம்.

"இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் உத்தியோக பூர்வமான அழைப்பை ஏற்று எமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்திலிருந்து டில்லி சென்ற தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், அவருடன் சென்ற எமது குழுவினரும் இன்று எம்முடன் தொடர்புகொள்ள முடியாத மோசமான சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இந்திய அரசின் இந்த நடவடிக்கை எமக்கு இந்திய அரசின் மீதுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது."

"எமது கட்டுப்பாட்டுப் பிராந்தியத்துக்குள் எமது ஆலோசனையோ அனுமதியோ இன்றி எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவோ அல்லது ஆயுதபாணிகளாக ஆக்கிரமிப்பதையோ நாம் எம் இறுதிமூச்சுள்ள வரை எதிர்த்துப் போராடுவோம்."

பிரதித்தலைவர்
கோ. மகேந்திரராசா



"தமிழ் மக்களின் சுபீட்சத்திற்காக களத்தில் நின்று போராடும் எம்முடனோ அல்லது அழிவுகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உட்பட்டு வேதனைகளுடன் துன்பங்களைத் தாங்கிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுடனோ கலந்தாலோசிக்கப்படாது, அவர்களின் எந்தவொரு அபிப்பிராயத்தையும் பெறாமல் இலங்கை - இந்திய அரசுகளால் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கோ ஒப்பந்தங்களுக்கோ நாம் மதிப்பளிக்க மாட்டோம்."

"இவ்வாறான இனப்படுகொலை முயற்சி எம் மக்கள் மீது திணிக்கபபடுவதை நாம கைகட்டி நின்று ஏற்கமாட்டோம்: எனவே எமது கட்டுப்பாட்டுப் பிராந்தியத்துக்குள் எமது ஆலோசனையோ அனுமதியோ இன்றி எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவோ அல்லது ஆயுதபாணிகளாக ஆக்கிரமிப்பதையோ நாம் எம் இறுதி மூச்சுள்ள வரை எதிர்த்துப் போரடுவோம். எம மீது இத் திட்டங்களையோ ஆக்கிரமிப்புக்களையோ எவரும திணிக்க முயற்சிப்பார்களேயானால் அதற்கு எம பிணங்களைக் கடந்துதான் அவறறை நிறைவு செய்ய வேண்டும் என்பதை மிகவும் ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகிறோம். இதே வேளை ஆயுதமற்ற நிலையில் நட்புணர்வோடு வருபவர்களை நிச்சயமாக வரவேற்று ஆதரிப்போம்."

## ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்

"அந்நிய நாட்டின் இராணுவ மற்றும் புலனாய்வு அதிகாரிகளின் நடமாட்டத்தால் பாரத இலங்கை உறவுக்கு குந்தகம் ஏற்படாதிருக்க தனியே இந்தியாவுடன் கடிதத் தொடர்பு வைப்பதாக இலங்கைதெரிவித்துள்ளது."

"இலங்கையின் திருமலை உட்பட இதர துறைமுகங்களைபாரத நலனுக்கு ஊறு ஏற்படுத்தக்கூடிய வேறு எந்த நாட்டின் இராணுவ நோக்கத்திற்கும் தரப்போவதில்லை என இலங்கை தெரிவித்துள்ளது."

"வெளிநாட்டு ஒலிபரப்பு அமைப்புக்களுடன் இலங்கை செய்துள்ள ஒப்பந்தங்களில் அமைக்கப்பட்ட வசதி இராணுவ அல்லது புலனாய்வு நோக்கத்துக்காக பயன்படுத்தாது பார்த்துக்கொள்ள அந்த ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய ஒப்புக் கொண்டுள்ளது.

"48 மணி நேரத்துள் சண்டை நிறுத்தம் கொண்டு வரப்படும்.

"சண்டை நிறுத்தத்திற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும், அதனை நிறைவேற்றுவதற்கும் பாரதத்தின்அமைதி காக்கும் படைப்பிரிவு ஒன்று இலங்கையில் நிறுத்தப்படும்.

"தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்தாலும், அரச இராணுவம் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்த இராணுவ முகாம்களுக்குத் திரும்பி விடலும்,

"கிழக்கு மாகாணத்தின் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நிகழும் வரை வடக்கு - கிழக்கு மாகாணங்கள் சேர்ந்து ஒரே நிர்வாகப் பிரிவாக அமையும்.

"அவசரகால விதியின் கீழ் உள்ள கைதிகளுக்கும் பிற கைதிகளுக்கும் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யப்படுவர்."

இந்த ஒப்பந்தத்தை எழுதி விட்டு 2. 8. 87 இல் மரீனாக் கடற்கரையில் ராஜீவ் பின்வருமாறு கூறினார் "இலங்கையின் மூன்றிலொரு பகுதி நிலம் தமிழ் மாநிலமாக்கப்பட்டுள்ளது அது இந்திய மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்."

இவ்வாறு கூறிய ராஜீவ் காந்தி தன்னைத்தானே கேலி செய்வது போல் 19. 7. 89 அன்று பிரேமாவிற்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "மாகாணகவுன்சில்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு தமிழ்ப்பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் வேண்டுமென்றே திணிக்கப்படாமல் இருந்திருந்தால் தீவிரவாதிகள் தனிமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டிருப்பர்.

ஒரு குழந்தைக்கு கூடத் தெரியும் பிரச்சினையில்லை என்றால் போராட்டம் இருக்காது என்று. எனவே அவர் முதல் கூறியபடி பிரச்சினைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

"இலங்கை- இந்திய ஒப்பந்தத்திலுள்ள அனைத்துஅம்சங்களையும் ஜெயவர்த்தனா அமுலாக்கியுள்ள போதிலும் அந்த ஒப்பந்தத்தினை எல். ரி. ரியினர் இன்னும் ஏற்காதிருக்கின்றனர்."

-ராஜீவ்



(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குத் தீர்வாக ஒப்பந்தம் இருந்திருந்தால் போராட்டம் இருந்திருக்காது. பிற் கூறிய வார்த்தையின் மூலம் முற் கூறிய ஒப்பந்தம் தீர்வாக அமைந்தது என்ற கருத்தை அவரே நிராகரித்து விட்டாரே!

ஆனால் இவ்வாறு கூறிய ராஜீவ் தன்னைத்தானே கேலிசெய்யும் பாணியில் கூறிய இன்னொரு கருத்தையும் கவனிப்போம்.

**"இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலுள்ள அனைத்து அம்சங்களையும் ஜெயவர்த்தனா அமுலாக்கியுள்ள போதிலும் அந்த ஒப்பந்தத்தினை எல். ரி ரி யினர் இன்னும் ஏற்காதிருக்கின்றனர்.**

குடியேற்றத்தை நிறுத்துவதாக ஒப்பந்தத்தில் கூறிய ஜே. ஆர் பின்பு அதை மீறியுள்ளார் என்பதை ராஜீவ் பிரேமாவிற்கு எழுதியுள்ள கடிதம் நிரூபித்துள்ளது. என்னே ராஜீவின் முரண்பாடு!

ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய சில விடயங்களில் கைதிகளின் பொது மன்னிப்பு, குடியேற்ற நிறுத்தம் என்பன துலாம்பரமாக தெரியக் கூடிய விடயங்கள். ஆனால் கைதிகளை விடுதலை செய்யாது தொடர்ந்து சிறையில் வைத்திருந்தமை ஒப்பந்த மீறல் இல்லையா? ஏன் இப்படியான நற்சான்றிதழை ஜே. ஆருக்கு ராஜீவ் வழங்கினார் இதுதான் ஒடுக்குமுறையாளர்களுக்கிடையேயான பரஸ்பர உறவு.

பிழையான ஒரு ஒப்பந்தத்தை இந்திய இலங்கை அரசுகள் தமிழர்கள் மீது திணித்தன. ஒப்பந்தத்தை மீறி புலேந்திரன், குமரப்பா உட்பட 14 புலிகளை கைது செய்த இலங்கை அரசு ஒப்பந்தப்படி அவர்களை இந்திய அரசிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் ஒப்பந்தத்தைமீறி அவர்கள் கொழும்புக்கு கொண்டு செல்ல விமானத்தில் ஏற்றப்படும் போது தான் சயனைட் வில்லை அருந்தினர். இதில் பன்னிரு புலிகள் மாண்டனர். இலங்கை இந்திய அரசுகளின் இத்தகைய நடவடிக்கைகள் எவ்வாறு ஒப்பந்த அமுலாக்கலை சாரும்.

இது தொடர்பாக அன்றைய தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் கூறிய ஒரு கருத்து இங்கு நினைவு கூருதல் பொருத்தம். "குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு புலிகளையும் மத்திய அரசு பாதுகாத்திருந்தால் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையிலான போரைத் தவிர்த்திருக்கலாம்."

'இரண்டாயிரம் பையன்கள் என்று தப்புக் கணக்குப் போட்டு 48 மணித்தியாலங்களுக்குள் புலிகளை நிராயுத பாணிகளாக்கி விடலாம் என ராஜீவ் நம்பினார். ஐ.பி.கே. எவ் விற்கும் புலிகளுக்கும் இடையில் சண்டை தொடங்கி சில தினங்களில் ராஜீவ் வெளியிட்ட கருத்தில் 'இன்னும் இரு வாரங்களுக்குள் எமது பையன்கள்(இந்தியராணுவம்) தமது கடமையை இலங்கை மண்ணில் நிறைவேற்றி விடுவார்கள்' என்று தெரிவித்திருந்தார். இவ்வாறு ராஜீவ் செய்தி விடுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்துடன் ஜே. ஆர். உரையாடிவிட்டு வெளியிட்ட ஒரு கருத்தில் 'பிரபாகரன்' வைத்திருக்கும் அந்தக் குத்துக் கத்தியை (இறுதி ஆயுதத்தை) சிறி கோதாவில் சில தினங்களில் தொங்க விடுவேன்' என்று தெரிவித்தார்.

யுத்தம் தொடங்கி ஆறு மாதத்திற்குப் பின்பு இந்திய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே 13.4.88 இல் வெளியிட்ட கருத்து ராஜீவிற்கும் ஜே. ஆருக்கும் ஒரு சிறந்த பதிலடியாகும். பாண்டேயின் வார்த்தையை அப்படியே நோக்குவோம்.

'விடுதலைப் புலிகள் தமிழ் மக்களைப் பாதுகாக்கவும் அவர்களது கௌரவத்தைப் பேணவும் போரிட்டு வருகின்றனர். எனவே தமிழர்களின் **பிரிக்க முடியாத ஓர் அங்கமாக அவர்கள் விளங்கி வருகின்றனர். யாழ்ப்பாண மக்களின் 90 வீதம் பேர் அவர்களை முழு அளவில் ஆதரிக்கிறார்கள். யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கோட்டையாகவிளங்குகின்றது, இனி மேலும் அது புலிகளின் கோட்டையாகவே இருக்கும், விடுதலைப் புலிகள் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக புத்திசாலித்தனத்துடனும்தந்திரத்துடனும் போரிட்டு வருகிறார்கள்.**

இந்தியஅமைதிப்படைத்தளபதிமேஜர் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நித்திகைக் குளத்தில் எதிர் நோக்கிய அவஸ்தை பற்றி மே இறுதிவரை 'இந்திய வீக்' சஞ்சிகையில் வெளியிட்ட ஒரு செய்தி மேற்குறிப்பிட்ட கருத்துக்களை மேலும் வலியுறுத்துகிறது.

''இந்திய அமைதிப் படை தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் முல்லைத்தீவு நிததிகைக்குள காட்டுப்பகுதியில் ஹெலிகொப்டரில் வந்து இறங்கினார். அந்த இடத்தில் இந்தியப் படை காவலையும் மீறி விடுதலைப் புலிகள் தரையில் இருந்த இரு ஹெலிகொப்டர்களையும் சுட்டு நொருக்கினார்கள். அதில் ஒன்று கல்கத்தினுடையது. பதுங்குகுழிக்குள் ஓடி ஒளித்து கல்கத்உயிர்தப்பினார். புலிகள் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு எதுவித உயிர் இழப்பும் இன்றி அமைதியுடன் திரும்பினார்கள்.''

மேஜர் ஜெனரல் கல்கத்தை இந்த இடத்தில் பாதுகாத்தமைக்காக அங்கு நின்றவர்களுக்கு 'வீரசக்கர விருது' வழங்கப்பட்டது. இதைப் பார்த்த அமைதிப்படை அதிகாரி ஒருவர் கூறியதாக 'இந்திய வீக்' பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

''வீரசக்கர விருது' வழங்கப்படவேண்டியது கல்கத்தை சுற்றி நின்றவர்களுக்கல்ல, ஹெலிகொப்டரை தாக்கிய விடுதலைப் புலிகளுக்கே''

மேலும் 1989 செப்டெம்பர் மாதம் வெளிவந்த 'இந்தியன் எக்ஸ்பிறஸ்' அமைதிப் படை குறித்து கூறிய கருத்தையும் நோக்குவோம். ''இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் எவ்வித நண்பர்களும் அற்ற நிலையில் மனம் சோர்வடைந்த நிலையில் வாழ்கின்றார்கள் இதனால் மற்றவர்களால் தாக்கப்படும்போது ஆத்திரமுற்று கொடூரச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.''

''அமைதிப் படை'' பற்றி அமெரிக்கன் ரைம்ஸ் செப்டெம்பர் இரண்டாம் வாரத்தில் வெளியிட்ட கருத்தில் ''வளர்ந்து வரும் பிராந்திய வல்லரசு ஒன்று என்னென்ன பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டுமோ அவற்றையெல்லாம் இலங்கையில் இந்தியா கற்றுக்கொண்டுள்ளது.''

இந்த ஒப்பந்தத்திற்குப்பிறகு இந்தியா என்றுமில்லாத வசை மாலையை தன் கழுத்தில் தானே மாட்டிக் கொண்டது. மிகப்பெரும் அழிவை அது தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியதுடன், தன்னை என்றுமில்லாதவாறு களங்கப் படுத்தியும் கொண்டது. இந்த வகையில் இந்தியாவை ஜே.ஆர் மாட்டி வைத்தார் என்றே கூறலாம். இது பற்றி ஜே.ஆர். தெரிவித்த கருத்துக்கள் நோக்கத்தக்கது.


**''முன்பு நாங்களும் புலிகளும் களத்தில் நின்று விளையாடிக்கொண்டிருந்தோம். இந்தியா மத்தியஸ்தனாக இருந்தது. ஆனால் இப்போது இந்தியாவும், புலிகளும் விளையாடிக் கொண்டிருக்க நான் மத்தியஸ்தனாய் நிற்கின்றேன்.''**

மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் ஜே. ஆர். கூறுகையில்;

**"முன்பு சிங்கள இளைஞர்கள் பலியானார்கள். நாங்கள் பணத்தைசெலவு செய்து கொண்டிருந்தோம். ஆனால் இப்போது இந்திய ஜவான்கள் பலியாகின்றனர். இந்தியா செலவு செய்து கொண்டிருக்கிறது''**

இவ்வாறாக தனது நிலையையும் இந்தியாவின் தோல்வியையும்ஜே.ஆர். அழகாகவே சொல்லி விட்டார் எனலாம்.

''இந்தியா விட்டமாபெரும் தவறு என்னவெனில் இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பியமையே'' என வி. பி. சிங் பிரதமராக வந்தபின் டிசம்பர் 5 ஆம் திகதி கூறியமையேஅமைதிப்படை''யினதும் இந்திய அரசினதும் தோல்வியை அப்படியே ஒப்புக்கொண்டுள்ளமையை காட்டுகின்றது.




''முன்பு சிங்கள இளைஞர்கள் பலியானார்கள். நாங்கள் பணத்தை செலவு செய்து கொண்டிருந்தோம் ஆனால் இப்போது இந்திய ஜவான்கள் பலியாகின்றனர். இந்தியா செலவு செய்து கொண்டிருக்கிறது.''

ஜே. ஆர்



"இந்தியா விட்ட மாபெரும் தவறு என்னவெனில் இந்தியப்படைகளை இலங்கைக்கு அனுப்பியமையே"

-வி. பி. சிங்



விடுதலைப்புலிகளால் தாககு அழிக்கப்பட்ட இந்தியாவின் T-72 டாங்கி.



விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயாவிடம் இருந்து போரின் போது கைதாகிய இந்திய சிப்பாய்களை இந்திய இராணுவ அதிகாரி பொறுப்பேற்றார்.

# வடமராட்சியில் போர்க்கால எழுச்சி ஊர்வலங்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியின் சகலகிராமங்களிலும் போர்க்கால எழுச்சி ஊர்வலங்களை மக்கள் கோஷங்களை எழுப்பிய வண்ணம் நடாத்தி வருகின்றனர். இன்றைய விடுதலைப் போராட்டத்திற்கு வலுவூட்டும் நடவடிக்கைகளாகவே இப்போர்க்கால எழுச்சி ஊர்வலங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இரவு வேளைகளில் தீப்பந்தங்கள் பிடித்துக் கொண்டும் மேளங்கள் அடித்துக் கொண்டும் கோஷங்களை எழுப்பிக் கொண்டுகிராமங்கள் தோறும் மக்கள் ஊர்வலமாகச் செல்கின்றனர். ஊர்வலங்களில் செல்வோர் கவர்ச்சிகரமான முறையிலும் விகாரமான முறையிலும் உடுப்புகள் அணிந்து அலங்கரித்துக் கொண்டே ஊர்வலமாகச் செல்கின்றனர். ஊர்வலத்தில் செல்வோர் எழுப்பிச் செல்லுங் கோஷங்களாவன:

- ★ ''போர் போர் புனிதப் போர்''
- ★ ''வீட்டிற்கொரு வீரராக விரைந்தோடி வாருங்கள்.''
- ★ ''வெற்றியின் வெளிச்சம் வெகுதூரத்திலில்லை''
- ★ 'தம்பியரே, தங்கையரே பாசறைக்கு வாருங்கள்''
- ★ ''துணிவான தந்தையரே துணைப்படையில் சேருங்கள்''
- ★ ''வரலாறு வா வா என அழைக்கிறது''
- ★ ''அந்நியபகை முகாமை அடியோடு அழிப்போம்''
- ★ கொடுமையின் கோட்டையைக் கொளுத்தியே விழுத்துவோம்''

இப்போர்க்கால எழுச்சி ஊர்வலங்கள் நாள் தோறும் இரவு வேளைகளில் நடாத்தப்பட்டு வருகின்றன. (25)

# பதவி வெற்றிடம் நிரப்பப்படமாட்டாது

சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களது பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது பொது நிர்வாக அமைச்சின் புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற சகல திணைக்களங்களதும் ஊழியர்களது வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஓய்வூதியத் திட்டத்தால் பொது நிர்வாக சேவையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு என்று நியமிக்கப்பட்ட குழுவினரே மேற்படி முடிவுக்கு வ துள்ளனர் எனினும் நாட்டின் அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் இக்குழுவினர் பொதுநிர்வாக அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். (க)

**சிந்தனைக்கு**

அனுபவம் சிறந்த பள்ளி; ஆனால் பள்ளிக் கட்டணம் அதிகம்தான்.

— ஹைன்ரீஷ் ஹைனெ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம், 29-07-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# அழிவிற்கு வித்திட்ட சமாதான ஒப்பந்தம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெரும் தாக்கத்தையும் திருப்புமுனையையும் ஏற்படுத்திய இந்திய - சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தின் ஐந்தாவது பிறந்த தினம் இன்றாகும். இந்த ஒப்பந்தத்தால் ஏற்பட்ட அனர்த்தங்கள், உறவு முறை மாற்றங்கள் என்பன தென்னாசிய வரலாற்றையே திசை திருப்பி விட்டது.

இலங்கைத் தமிழரின் பெயரால், அவர்களின் சம்மதம் எதுவுமின்றி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இதுவாகும். இந்த ஒப்பந்தத்தின் பெயரால் 6000க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர் பல கோடி ரூபா சொத்து நாசமாக்கப்பட்டது விடுதலைப் புலிகள் தரப்பிலும் 750 பேர் வீரமரணமடைந்தனர்.

இந்தியாவிற்கும் இலங்கைத் தமிழருக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வந்த நட்புறவை இந்த ஒப்பந்தம் சீரழித்தது இரு பகுதியினருக்கும் இடையில் நீண்ட மோதலுக்கும் வழி வகுத்தது.

இராஜதந்திர ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் இந்தியாவிற்குப் பெரும் தோல்வியை ஏற்படுத்திய ஒப்பந்தம் இதுவாகும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இந்திய இராணுவத்தை வரவேற்ற சிறிலங்கா அரசாங்கமே இலங்கையை விட்டு வெளியேறுமாறு இந்தியாவை வற்புறுத்தியது 50 கோடி டொலர் பணத்தையும் ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவ வீரர்களை இழந்தும் சிறிலங்காவின் நம்பிக்கைக்கு இந்தியாவால் பாத்திரமாக முடியவில்லை. அதேவேளை புலிகளை ''பையன்கள்'' என நினைத்துத் தமிழருக்கு எதிராகத் தொடங்கிய போரிலும் வெற்றி பெற முடியவில்லை,

இந்திய-சிறிலங்கா ஒப்பந்தம் பற்றி எப்பொழுதும் இந்திய இராணுவ அதிகாரிகள் மத்தியில் குழப்பமே இருந்து வந்தது. அவர்கள் எதற்காகப் போரிடுகின்றோம், யாருக்காகப் போரிடுகின்றோம் என்ற நிலை தெரியாமலே புலிகளுடன் போரிட்டார்கள் இதனை போர் நடந்த போதும், அதன் பின்னரும் பல இந்திய இராணுவ அதிகாரிகள் வெளிப்படுத்தி உள்ளனர் ஆனால் இராஜதந்திரிகளினதும், அரசியல்வாதிகளினதும் மேலாதிக்கச் சிந்தனைகளே இந்தப் பெரும் தோல்வியை இந்தியாவிற்கு ஏற்படுத்திக் கொடுத்தது இந்திய அரசியல்வாதிகளும் இராஜதந்திரிகளும் இலங்கைத் தமிழரை ஒரு பொருட்டாக எப்பொழுதும் எண்ணவில்லை அவர்களின் விடுதலை வேட்கையையும் உணர்வையும் மதிக்கவில்லை.

ஒரு சிறிய மக்கள் கூட்டம் உலகின் நான்காவது பெரிய இராணுவத்திற்கும், அதன் அதிகாரத்திற்கும் பணிந்து விடும் என இந்திய அரசியல்வாதிகளும் இராஜதந்திரிகளும் கருதினர் ஆனால் இந்தச் சிறிய இனக் கூட்டத்தினால் இந்தியாவின் பிராந்திய ஆதிக்கக் கொள்கை தவிடு பொடியானது

இந்தியா ஆங்கிலேயர் பிடியில் இருந்து விலகிய பின்னர் இந்திய - சீன விவகாரத்தில் ஏற்பட்ட இராஜதந்திர இராணுவத் தோல்வியின்பின் இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்பட்ட இராஜதந்திர, இராணுவத் தோல்வி இதுதான் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. ஆனால் இவ்வாறானதொரு படிப்பினை கிடைக்கும் என இந்தியத்தரப்பில் எவருமே எதிர்பார்க்கவில்லை புலிகளுடன் போர் ஆரம்பித்த பின்னர் இந்தியாவிற்கு இலங்கை ஒரு வியட்நாம ஆகிவிடுமோ என்ற அச்சம் அவர்களைப் பற்றிக் கொண்டது.

ஆனால், இந்திய அரசியல்வாதிகள் சிலர் இன்னமும் இந்த சமாதான ஒப்பந்தத்திற்குப் புத்துயிர் ஊட்ட முற்படுகின்றனர் ஆனால் சிறிலங்கா அரசாங்கம் ஒப்பந்தத்தை தூக்கி மூலையில் போட்டு விட்டது இது இந்திய அரசியல்வாதிகளுக்கும் இராஜதந்திரிகளுக்கும் தெளிவாகத் தெரியும். ஆனால் தேசத்தின் நலன் என்பதைவிட தனிநபர்களின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்ப அரசியல் நடைபெறும் இந்தியாவில் ராஜீவ்காந்தி இந்த ஒப்பந்தத்தைச் செய்தார் என்பதனாலேயே இந்த ஒப்பந்தம் பற்றி இப்பொழுதும் சிலர் பேசுகின்றனர் ஆனால் இந்த ஒப்பந்தம் நடைமுறைச்சாத்தியமோ அன்றி தமிழர் பிரச்சினைக்குதீர்வு எதையும் வழங்கக் கூடியதோ அல்ல

அதேவேளை இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா இழந்ததைவிட கற்றுக் கொண்ட படிப்பினையே பெரிதென்றும் கூறலாம் அமெரிக்க டைம்ஸ் குறிப்பிட்டது போன்று வளர்ந்து வரும் பிராந்திய வல்லரசு ஒன்று என்ன என்ன பாடங்களைக் கற்க வேண்டுமோ அத்தனை பாடங்களையும் இலங்கையில் இந்தியா கற்றுக் கொண்டது என்பது மிகவும் சிறப்பான, பொருத்தப்பாடான கூற்றாகும்.

# வரலாற்றில் தனியிடம் பெற்ற ஆனையிறவுப் பெரும் போர்

**- மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா**

ஆனையிறவுப் பகுதியில் மூன்றாவது வாரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பெரும்போர் உலக வரலாற்றில் தனியிடம் பெறும் போர் நிகழ்வாக ஆகியிருக்கிறது.

''இப்படியும் ஒரு போரா'' என்று உலகமே மூக்கில் விரலை வைத்து அதிசயிக்கின்றது.

விடுதலை வேட்கையோடு, வீரத்தோடு போராடும் இளைஞர்கள் யுவதிகள் கூட்டம் ஒருபுறம்; அந்த விடுதலை உணர்வை நசுக்கி அவர்களை அடிமைப்படுத்த சிங்கள அரசினால் அனுப்பப்பட்ட ஆயுதப்படை மற்றொருபுறம்; வெட்டைவெளியில் அணிவகுத்து நின்று சமர் புரிகின்றன.

இவ்வாறு கடந்த 26 ஆம் திகதி புலிகளின் குரலில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் தெரிவித்ததாவது:

வானத்தையும், கடலையும் தளமாகப் பயன்படுத்தக் கூடிய ஆற்றல் கொண்ட நிலையில் புதிய படைக்கல வசதிகளுடனும், கனரக வாகனங்களுடனும், பல ஆயிரக் கணக்கான சிங்கள இராணுவம், காயகப்பற்றும் விடுதலை வேட்கையும் கொண்டு எழுச்சியுற்றிருக்கும் இளைஞர் கூட்டத்தோடு மோதுகிறது.

பாலைவனம் போன்ற மிகப் பெரிய மணல் வெளியில் ஆயுத பலமும் போதிய பயிற்சியும் கொண்ட ஒரு நாட்டின் மரபுவழிப்படை, போதிய பயிற்சியோ, பட்டறிவோ, ஆயுதங்களோ அற்ற நிலையில் வீர உணர்வையும் விடுதலை வேட்கையையுமே ஆயுதமாகக் கொண்ட இனமான இளைஞர்களோடு மோதுகின்றது.

இந்தப் பாலைவனப்போர் மூன்றாவது வாரத்தை எட்டியுள்ளது. உலகில் இது போன்று வெட்டை வெளியில் இரண்டு வாரங்களாக இரவு பகலாக இடைவிடாத போர் நடைபெற்றதாக வரலாறு இல்லை.

அன்பான தமிழ் ஈழ மக்களே! இன்று இந்தக் களத்தில் நிற்போர் யார்? உங்களது உடன் பிறந்தோர், உங்களது பிள்ளைகள், உங்களது உற்றார், உறவினர்கள், உங்களது நண்பர்கள் தான் களத்தில் நிற்கிறார்கள். களத்தில் நிற்கும் அந்த வீரர்களின் பழுவைக் குறைக்க நீங்கள் அனைவரும் இந்தப் போரில் உங்கள் முழுமையான பங்களிப்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அன்பான தமிழீழமக்களே! நீங்கள் அனைவரும் இந்தப் போரில் எங்களுடன் இணைந்து போராடுவதன் மூலம்தான் உங்கள் பிள்ளைகளின், உங்கள் உடன்பிறப்புக்களின், உங்கள் உற்றார் உறவினர்களின் இழப்புக்களை குறைக்கமுடியும்; தவிர்க்க முடியும். தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து போராடி இறந்த தமிழனைவிட போராட்டத்தில் இருந்து ஒதுங்கியிருந்து கொல்லப்பட்ட தமிழர்கள்தான் அதிகமாகும். எதிரியின் கண்மூடித்தனமான வெறிச் செயல்களினால் எமக்கு எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எப்படியும் சாவு வரலாம். எமது விடுதலையைப் பெறுவதன் மூலம் மட்டும் தான் அதைத் தடுத்து நிறுத்த முடியும்.

எனவே, உங்கள்விடிவுக்காக தன்னலங் கருதாது கழுத்தில் நஞ்சுக் குப்பியுடன் களத்தில் நின்று போராடும் வீரர்களின் தோளோடு தோள்



சேர்ந்து போராட வாருங்கள். வீரமரணம் அடைந்த, விழுப்புண்ணேற்ற வீரர்களின் ஆயுதங்களும் எதிரியிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட ஆயுதங்களும் ஆயிரமாயிரமாக எமது பாசறையில் உங்களுக்காக காத்து நிற்கின்றன. அவற்றை கையிலேந்தி உங்களை, உங்கள் குடும்பத்தை, உங்கள் உற்றார் உறவினர்களை, உங்கள் இனத்தைக் காக்கப்புறப்படுங்கள். ஆண்களுக்கு நிகராக பெண்களும் களத்தில் நிற்கின்றனர். காலை இழந்த வீரர்கள் கூட களத்தில் நிற்கின்றார்கள் உடல் ஊனமுற்றவர்கள், சிறுவர்கள் கூட களத்தில் நிற்கின்றனர்.

எனவே உலக வரலாற்றில் இடம் பெறப் போகின்ற, இடம் பெற்றுவிட்ட இந்த உன்னதப்போரில் போர்க்களத்துக்கு வெளியே பங்கேற்க இயலவில்லை என்று எவரும் ஒதுங்கி இருக்கக் கூடாது. இந்தப் போரில் பல்வேறு கடமைகள் உங்களுக்காகக் காத்திருக்கிறது.

குருதிக்கொடை கொடுப்பது, வீரர்களுக்கான பதுங்கு குழி காப்பரண்கள் அமைப்பது, களத்தில் நிற்கும் வீரர்களின் தேவைகளை நிறைவு செய்வது, விழுப் புண்பட்ட வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பது, அவர்களைப் பராமரிப்பது, களப் பயிற்சிக்கு ஆட்களைத் திரட்டுவது இப்படி பல்வேறு பணிகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.

களத்தில் விழுப்புண் ஏற்று சிகிச்சைக்குச் சென்ற வீரர்களே அரைகுறைச் சிகிச்சையுடன் காலத்தின் நிலையுணர்ந்து மீண்டும் களம் நோக்கி விரைந்துகொண்டிருக்கின்ற நிலையில் இதுவரை போர்ப் பணியில் இருந்து விலகி இருக்கின்ற தமிழ் மக்களே! காலம் கனிந்து விட்டது! கடமை அழைக்கிறது! விரைந்து வாருங்கள்! உளக்களிப்போடு இணைந்து செயற்படுங்கள்! தமிழீழ விடுதலை அண்மித்து விட்டது! வெற்றி நமதே!

## இவ்வருட இறுதிக்குள் பல்கலைக்கழககல்லூரிகள்

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள்ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது பல்கலைக்கழக கல்லூரிகளை நிறுவுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஒன்பது பல்கலைக்கழகக்கல்லூரிகளையும் நிறுவுவதற்கு மூன்று கோடி ரூபா ஒதுக்கியுள்ளது என்று உயர்கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்

அத்துடன் 25 மாவட்டங்களிலும் மேலும் 25 பல்கலைக் கழகங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும். இந்தப் பல்கலைக் கழகங்கள் ஒன்பது தேசிய பல்கலைக்கழகங்களுடனும் இணைக்கப்படும் என்றும், அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இணைக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள்தேசிய பல்கலைக் கழகங்களில் போதிக்கப் படும் பாடங்களையே கற்பார்கள் என்றும் இறுதி பரீட்சைக்குத் தோற்றி தேசிய பல்கலைக் கழகங்கள் வழங்கிய அதே பட்டத்தையே பெறுவார்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## யப்பான் இராணுவம் வெளிநாடுகளில் செயற்படும்

(டோக்கியோ)

வெளிநாடுகளில் நிவாரண வேலைகளுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் சுயபாதுகாப்பு படைப் பிரிவினரை ஈடுபடுத்துவதற்கு யப்பானிய பாதுகாப்பு அமைச்சகம் தீர்மானித்துள்ளது

யப்பானிய பாதுகாப்பு அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்ட பாதுகாப்பு துறை சம்பந்தமான வெள்ளை அறிக்கையில் மேற்படி தீர்மானம் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த அமைச்சின் வெள்ளை அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டிருப்பது இதுவேமுதற் தடவையாகும்.

வளைகுடா யுத்தத்தின் போதும் மற்றும் சர்வதேசசமூகம் சம்பந்தப்பட்ட மட்டிலும் சுயபாதுகாப்புப் படைப் பிரிவினர் ஆற்றிய பணி குறித்து சர்ச்சைகள் ஏற்பட்டுளளன என்றும் இப்படைப்பிரிவினர் இராணுவ நடவடிக்கை அற்றவிதத்தில் சேவை புரிந்ததினால் யப்பானின் அரசியல் யாப்புமீறப்படவில்லை என்றும் இந்நிலையம் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென் ஆபிரிக்காவிற்கு ஒலிம்பிக் அழைப்பிதழ்

முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தென் ஆபிரிக்காவிற்கு முதல் தடவையாக ஒலிம்பிக்பந்தைய அழைப்பிதழ் கிடைத்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென் ஆபிரிக்காவின் புதிய தேசிய ஒலிம்பிக் நிர்வாகக் குழுவினை அழைப்பதற்கான பத்திரத்தில் சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகக்குழுவின் தலைவர் கையெழுத்திட்டுள்ளார்

1960ஆம் ஆண்டு ரோமில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியிலேயே தென் ஆபிரிக்கா இறுதியாக கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# மாவீரர் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்கு

(ஈச்சமோட்டை)

ஆனையிறவில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த 9 போராளிகளின் புகழுடல்கள் நேற்று பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

நிருபன் (வேலாயுதம் பாலச்சந்திரன் கிண்ணியா)

மொறாஜி (அரசரட்ணம் அரவிந்தன் கட்டைபறிச்சான்

சுஜன் (கோபாலப்பிள்ளை புஸ்பராசா ஈச்சிலம்பத்தை மூதூர்)

சகீம் (ஜெகதாஸ் செல்வபுரம் உரும்பராய்)

கேசிகன் (பரஞ்சோதிநாதன் நியூட்டன் பண்டத்தரிப்பு)

உமாசங்கர் (சின்னமணி செஞ்சியஸ் குருநகர்)

வர்மன் (சுந்தமூர்த்தி பாஸ்கரமூர்த்தி வாழைச்சேனை)

சிசிலா (ரஞ்சினி நடராசா சுழிபுரம்)

கார்த்திகா (ரபணி இராஜரட்ணம் நாவாந்துறை)

ஆகியோரின் புகழுடல்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

பெருந்தொகையான மக்கள் கண்ணீர் மல்க சாரிசாரியாக வந்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின் இரங்கல் உரை இடம் பெற்றது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்களான தேவர், தனபால் ரஞ்சன் மாஸ்டர், பாரதி ஆகியோர் உரையாற்றினர் பின் 5 மணியளவில் பான்ட் வாத்திய இசை வானை முழங்க ஊர்வலமாக மாவீரர்களின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாகின. (43)

# தமிழகத்தில் வெடிவிபத்து; இரு இலங்கையர் மரணம்

(சென்னை)

கோயம்புத்தூரில் விடுதலைப் புலிகள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீடொன்றை தமிழக காவல் துறையினர் நேற்றுக் காலை சோதனையிட முனைந்தபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் அந்த வீட்டில் இருந்த இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டனர் என தமிழக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் இலங்கைத் தமிழர் என்று தமிழக பொலிஸார் தெரிவித்தனர்.

## விபத்தில் ஒருவர் காயம்

கைதடி நுணாவில் பகுதியில் நேற்றுமாலை கண்டி வீதியால் வந்து கொண்டிருந்த லான்ட்மாஸ்ரருடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் சைக்கிள் ஒன்று திருட்டுப்போயுள்ளது.

நேற்று மாலை பார்வையாளர் நேரத்தில் வைத்திய சாலை வளாகத்தில் பூட்டி வைக்கப்பட்ட புதிய ஏசியா சைக்கிள் தான் களவாடப்பட்டுள்ளது.

### தமிழீழப்

தையும் மேற்கொள்வர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் வெற்றிலைக்கேணியில் மேலும் இரு படையணிகளைக் குவித்ததன் மூலம் நிலைமை அரசுக்குசாதகமாகியிருப்பதாகவும், ஆனையிறவுப் போர் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையாக அமையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

### இறுதித் தாக்குதலுக்கு

கொழும்பில் இதனைத் தெரிவித்த அந்த அதிகாரி சிறிலங்கா இராணுவத்தினர் இதுவரை பாதியளவு தூரத்தையே கடந்துள்ளனர் என்றும், இறுதித் தாக்குதலுக்காக சிறிலங்கா இராணுவத்தின்பலம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

### குறிஞ்சாத்தீவு

அரண்களினுள் பிரவேசித்த விடுதலைப் புலிகள் அவற்றைத் தாக்கி அழித்து விட்டுத் திரும்பினர்.

இத் தாக்குதலின்போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 50 போராளிகள் வீரமரணமடைந்தனர். வீரமரணமடைந்த போராளிகளில் லெப். கேணல் சரா, மேஜர், குகதாஸ், சொனி ஆகியோரும் அடங்குவர்.

### இரத்தம் தேவை

சூழ்லைக் கருத்திற்கொண்டு இரத்த தானம் செய்ய முன் வரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### மட்டு. புலிகள்

தெரியவருகிறது

புலிகளால் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்வருமாறு

- ★ ரீ-56IIரகத்துப்பாக்கிகள் 4
- ★ ரீ-56I ரக துப்பாக்கிகள்-1
- ★ ரீ-56 ரக துப்பாக்கி - 01
- ★ ரீ-81 மகஸீன் - 02
- ★ ரீ-56 மகஸீன் - 31
- ★ ஏ கே எல்.எம்.ஜி றம்மகஸீன் - 04
- ★ வெடி மருந்துப் பொதி 1 கிலோ
- ★ ஐ எம். ரவைகள் - 383
- ★ ஏ கே கோல்ஸர் 03
- ★ குண்டு துளைக்காத கவசம் - 04
- ★ இராணுவப் பைகள் - 03
- ★ சப்பாத்துகள் 03 சோடி
- ★ ஜே. ஆர் கிரனைட் - 03
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
- ★ குறடு - 02
- ★ முகக் கவசம் - 01

### கூட்டுப் பொருளாதார

கள், அமைச்சர்கள், அதிகாரிகள் பலரையும் சந்திக்கவுள்ளனர்.

இவர்கள் இன்று இந்தியா இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக் குழுவுக்கான உடன்படிக்கையில் புதுடில்லியில் கைச்சாத்திடவுள்ளார்கள். சிறிலங்கா இந்தியாவின் சார்பில் வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங்சோலங்கிஉடன் படிக்கையில் கையெழுத்திடவுள்ளார்.

கூட்டு ஆணைக்குழு பல உபகுழுக்களைக் கொண்டிருக்கும் இந்திய இலங்கை கூட்டு ஆணைக்குழு பொருளாதார விடயங்களை விருத்தி செய்வதுடன் அரசியல் விவகாரங்களிலும் புரிந்துணர்வுக்கு வழி செய்யும் என்று கொழும்பில் வெளியுறவு அமைச்சு அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிற்றூரவைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள சகல சிற்றூரவைகளினதும் தலைவர், செயலாளர்களுக்குரிய முக்கிய கூட்டமொன்று நாளை பிற்பகல் இரண்டு மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகலரையும் தவறாது சமுகமளிக்குமாறுகேட்கப்பட்டுள்ளது. (மு

## சாளரம் நாளை வெளிவரும்

இளையோர் திங்கள் இதழான சாளரம் ஆகஸ்ட் மாத இதழ் நாளை வெளிவருகின்றது. இவ்விதழிற்கு செம்பியன் செல்வன் எழுதிய மீட்சி என்னும் உருவகக் கதையும் சபா. ஜெயராசா எழுதிய தமிழர் பாரம்பரிய கல்வி நிறுவனங்கள் பற்றியும் ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்பற்றி சாரணனும், நிலாமுற்றத்தில் ஒரு கவிஞரின் தீர்க்க தரிசனத்தை வியக்கும் விவேக்கும் பங்களிப்பு செலுத்தியுள்ளனர்.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்க தொழிற் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், தொழிற் சங்கம் இல்லாத சங்கங்களின் பிரதிநிதிகள் (மூவர்) ஆகியோருக்கான போர்க்கால நடவடிக்கை சம்பந்தமான கலந்துரையாடல் நாளை 30-7.91 செவ்வாய் காலை 10-00 மணிக்கு யாழ். கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகலரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளார்கள்

## அகதி முகாமில் தீ விபத்து

ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துவந்த அகதிகள் பலர் தங்கியிருந்த தற்காலிக முகாமொன்றில் நேற்றுமுன்தினமிரவு தீவிபத்து ஏற்பட்டது. அரியாலைப்பகுதியில் நடந்த இச்சம்பவம் சமையல் பகுதியிலிருந்து பரவிய தீயினால் ஏற்பட்டதாகத் தெரிகிறது. பலத்த சேதமடைந்த முகாமில் உடனடி நிவாரண நடவடிக்கைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் எடுக்கப் பட்டிருப்பதோடு இடம்பெயர்ந்தோருக்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் மற்றும் பாவனைப் பொருள்களும் வழங்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (11)

### லெப். கேணல்

பகுதியில் திருநெல்வேலிப் பிரதேசப் பொறுப்பாளராகச் செயற்பட்டவர்.

இந்திய இராணுவத்தினருடனான போரில் அவர்களுக்கு பாரிய சேதத்தை விளைவித்தவர். அக்கால கட்டத்தில் கையில் காயமுற்ற இவர் வைத்திய சிகிச்சைக்காக தமிழகம் சென்ற சமயம் அங்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சென்னைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அங்கிருந்து தளபதி கிட்டுவுடன் காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்பட்ட போராளிகளில் இவரும் ஒருவர். சுமார் ஒரு வருடம் 3 மாதம் இந்திய இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போதும் அவர்களால் இவரை இனங்காண முடியவில்லை. விடுதலையாகும் காலத்திலேயே இவர் இனங்காணப்பட்டார். விடுதலையாகி வந்ததும் பல பயிற்சி முகாம்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்.

இவருடன் வீரமரணமடைந்த மேஜர் குகதாஸ் இந்திய இராணுவத்தினரிடமிருந்து தப்பிச்சென்று அவர்களுக்கெதிராக பல தாக்குதலை நடத்தியவர்.

# படைகள் விரிவாக்கத்தைவிட நவீனமயப்படுத்தப்படும்

— சரத்பவார்

(புதுடில்லி)

முப்படைகளை மேலும் விரிவாக்குவதைவிட அவற்றை நவீன மயப்படுத்துவதற்கே முக்கியத்துவம் தரப்படும் என இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர்சரத்பவார் கூறியுள்ளார். ஜெய்ப்பூரில் இராணுவ வீரர்களிடையே பேசிய அவர் மேலும் போர்த்திறமையை மேலும் விரிவுபடுத்த நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஆயுதங்கள் படையினருக்குத் தரப்படும் என்றும், அண்டை நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளவே இந்தியா விரும்புகின்றது என்றும், ஆனால் பஞ்சாப், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவுவதன் மூலம் பாகிஸ்தான் இந்தியாவில் பிரச்சினைகளை கிளப்ப முயல்கிறது என்றும் கூறியுள்ளார்.

# நெல் கொள்வனவால் பண முடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் அண்மையில் கணிசமான அளவு நெல்லைக்கொள்வனவு செய்ததால் பெருந்தொகையான பணம் முடங்கிப்போயுள்ளது என தமக்கு கூட்டுறவு சங்கங்கள் முறைப்பாடு செய்துள்ளதாக கூட்டுறவு கிளைவட்டாரங்கள் கூறியுள்ளன.

இதுபற்றி மேலும் கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள்மட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாவது விவசாயிகளிடம் இருந்து யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் நாற்பது லோட் வரையான நெல்லைக் கொள்வனவு செய்திருந்தன. இந்த நெல்லை கொள்வனவு செய்வதற்கான பணத்தை யாழ்ப்பாணம் கச்சேரி வழங்குவதாக இருந்த போதிலும் இறுதி நேரத்தில் கைவிரித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (லோ)

# காவிரி நீர் பிரச்சினை உயர்நீதிமன்றம் செல்கிறது

(சென்னை)

தமிழ் நாடு அரசு காவிரி நீர் வழங்கல் பிரச்சினை தொடர்பாக வழக்கொன்றை சுப்றீம் கோர்ட்டில்தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளது சென்னையில் நேற்று நடைபெற்ற தமிழ் நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய அரசு காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாகசுப்றீம் கோர்ட்டை அணுகியதைத் தொடர்ந்தே சென்னையில் அமைச்சரவையின் அவசரக் கூட்டம் நேற்று கூட்டப்பெற்றது. மத்திய அரசின் மேற்படி நடவடிக்கை ஏமாற்றத்துக் குரியதும் தேவையற்றதுமான செயல் என்று அமைச்சரவை அவசரக் கூட்டத்தில் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலைப் பின்போடுவதென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

காவிரி நீர் பிரச்சினையில் சுப்றீம் கோர்ட்டின் சட்டவாதிக்கத்தைப் பாதுகாக்கும்படி கோரி மாநில அரசுகளுக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் எழுதுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காவிரி நீர் விவகாரம் தொடர்பான மத்திய அமைச்சர்கள் சிதம்பரம், அருணாசலம் ஆகியவர்களின் நிலைப்பாட்டிற்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளதாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் கிடந்த பொருள் ஒன்றை கல்லில் வைத்துக் குற்றியபோது அதுவெடித்துச் சிதறியது. இதனால் பன்னிரெண்டு வயதுச் சிறுவன் முத்துலிங்கம் மூன்று விரலை இழந்தான். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

முல்லைத்தீவு நெடுங்கேணியைச் சேர்ந்த இச்சிறுவன் தற்பொழுது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (லோ)

### இராணுவத்தின்

மணியளவில் முன்னேற முற்பட்ட சிறிலங்கா கவச வாகன அணிமீது விடுதலைப் புலிகள் கடும் ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும்இதனால் ஐந்து கவச வாகனங்கள் அழிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இம் மோதல் மாலை நான்கு மணிவரையும் நீடித்தது. அதேவேளை இராணுவத்தினர் 500 மீற்றர் வரையில் முன்னேறியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இராணுவத்தினரும் புலிகளும் மிக அருகருகே நின்று கடும்போர் புரிந்து வருகின்றனர். இம் மோதல்களில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் பதினேழு போராளிகள் வீரமரணமடைந்தனர்

ஒப்பரேசன் பலவேகயவின் இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைக்காக இரு மேலதிக படை அணிகள் வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறக்கப்பட்டதும் அநுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு விசேட வைத்திய அதிகாரிகள் குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மீண்டும் ஊரடங்கு

(கொழும்பு)

காரைதீவு தவிர்ந்த யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளதாக கூட்டுப் படைகளின் செயற்பாட்டுத் தலைமையலுவலகம் கொழும்பில் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் கூறியுள்ளது

## 80,000 கோடி கறுப்புப்பணம்

(டில்லி)

இந்தியாவில் வரி செலுத்தாமல் இந்திய நாணயத்தில் 80,000 கோடி ரூபா கறுப்புப் பணம் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## வயோதிபப்பெண் தற்கொலை

(கொடிகாமம்)

வயோதிபப் பெண் ஒருவர் தனது நோயின் உபாதை தாங்க முடியாமல் வீட்டின் அருகில் உள்ள குளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. எழுபத்தியேழு வயதான இ. தங்கமுத்து என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். அதிகாலையில் இவர் குளத்தில் விழுந்ததைக்கண்ட அயலவர் உடன் அவரைமயக்க நிலையில் காக்கியம் குளத்தில் இருந்து மீட்டபோதும், பிற்பகல் நான்கு மணியளவில் அவர் உயிரிழந்தார். (86)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.